தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 11

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாயூரம் மகளிர் கலைக் கல்லூரி.

*813 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் மகளிர் கலைக் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் எத்தனை ஆசிரியைகள் தற்போது பணியாற்றி வருகிறார்கள் ?

(இ) தற்போது உள்ள வகுப்புகளுக்குத் தேவையான வரலாற்று ஆசிரியைகள் நியமிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பேராசிரியர்—ஒருவர்

துணைப் பேராசிரியர்—எழுவர்.

ஆற்றுநர்—ஒருவர்.

(இ) உண்மை அல்ல.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, வரலாற்று ஆசிரியர்கள் இல்லை என்றுதான் அங்கிருந்து மனு வந்தது. அமைச்சரவர்களின் பதிலில் அப்படி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, உண்மை எது என்

பதை ஆராய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படிப் போது மான வரலாற்று ஆசிரியர்கள் இல்லையென்றால் அவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தத் துறைக்குப் போதுமான ஒரு பேராசிரியர், 7 துணைப் பேராசிரியர்கள், ஒரு டெமான்ஸ்ட்ரேட்டர் என்ற அளவில் மொத்தம் 9 பேர் இருக்கிறார்கள். அந்தத் துறைக்குப் போதுமான அளவில்தான் இருக்கிறார்கள். வேண்டுமென்றால் இடை யிலே அங்கே ஒரு திங்கள் அல்லது இரண்டு திங்கள் துணைப் பேராசிரியர்கள் ஒருவர் இருவர் நியமிக்கப்படாமல் இருந்திருக்காலாம். இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் தேவையான அளவில் இருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, கல்லூரிகள் ஜூன், ஜூலையில் துவங்கப்பட்டால், கிட்டத்தட்ட டிசம்பர் மாதம் வரையில் போதுமான பேராசிரியர்கள் இல்லாமல் இருப்பதால் வகுப்புகள் நடத்து வதற்குத் தாமதமாகிறது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து பல்லாண்டு களாக இருந்து வருகிறது. அந்தக் குறையை இந்த ஆண்டிலிருந்தாவது போக்குமளவில் கல்லூரி துவங்கும் நேரத்திலேயே எல்லாக் கல்லூரிகளிலேயும் பேராசிரியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்லூரி திறப்பதற்கு முன்னாலேயே எவ்வளவு இடங்கள் காலி ஏற்படவேண்டும், எந் தெந்த இடங்களில் யாரைப் போட வேண்டுமென்று முன்கூட்டியே தீர்மானித்து, 10-ஏ (1)-ன்படி முன்கூட்டியே தேர்ந்தெடுத்து அந்த இடங்களை நிரப்ப வேண்டும் என்றும், பிறகு தேர்வு ஆணைக்குழு தேர்ந்தெடுப்பதற்கு வசதி ஏற்படும் சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டிருக் கிறது. அதைக் கல்லூரி கல்வி இயக்குநரிடத்திலும் அறிவிக்கப்பட்டிருக் கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மாயூரம் பெண்கள் கல்லூரியில் ஏற்கனவே பாட்டனி புரொஃபசர் இல்லாமல் இருப்பதாகத் தகவல் கொடுக்கப் பட்டது. இப்படி இந்தக் கல்லூரியைப்பற்றி இம்மாதிரி புகார்கள் வருகின்றனவே, குறிப்பிட்ட பேராசிரியர்கள் அங்கே போடப்படாமல் இருக்கி றார்களா? இப்பொழுது அங்குள்ள நிலைமை என்ன? மற்ற எல்லாப் பேராசிரியர்களும் போடப்பட்டிருக்கிறார்களா?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அந்தத் தகவலை அறியலாம். வரலாற்றுத் துறையைப் பொறுத்தவரையில் அந்தக் குறைபாடு இல்லை என்பதைத்தான் சொன்னேன்.

Devikumari College, Kuzhithurai

* 814 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals to open new courses of studies at the Devikumari College at Kuzhithurai Municipality in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. தேவிகுமாரி கல்லூரியில் புதுவகுப்புகள் தொடங்கக்கோரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமோ அல்லது கல்லூரிக் கல்வி இயக்குநரிடமோ பரிசிலனையில் இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, குழித்துறை பக்கத்தில் பெண்கள் கல்வி கற்பதற்கு வேறு கல்லூரிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்கள் நாகர்கோவிலுக்குத்தான் போக வேண்டியிருக்கிறது. புதிதாக ஏகதேசம் 10 ஏக்கர் நிலங்கள் அந்தக் கல்லூரி கட்டடம் அமைப்பதற்காக டொனேட் செய்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இந்தக் கல்லூரியைமாற்றினால் இன்னும் அதிக வகுப்புகளை வைப்பதற்கு வசதியாக இருக்கும். அம்மாதிரி புதிய வகுப்புகளை வைக்கவும், கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி விண்ணப்பங்கள் வரவில்லை, அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. அப்படிப்பட்ட நிலைமைகள் வந்தால் ஆராயலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தக் கல்லூரி சம்பந்தமாக இப்பொழுது ஒருசில சயன்ஸ் சப்ஜெக்ட்ஸ், ஒருசில ஆர்ட்ஸ் சப்ஜெக்ட்ஸ் இருக்கின்றன. பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிலே இன்னும் அதிகமாக மாணவிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு எல்லா சௌகரியங்களும் இருந்தும் அந்த இலாக்கா—தேவஸ்வம் இலாக்கா—நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இனிமேலாவது வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.